Thiruthangal Nadar College
Knowledge is Power

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

**சேலவாயல், சென்னை - 51**

## தமிழ்த்துறை

## செய்தி மடல் (2024 - 2025)

| சிறப்பாசிரியர் | மேலாண்மை ஆசிரியர் |
|---|---|
| திரு. A. நாராயணமூர்த்தி<br>தாளாளர் மற்றும் செயலாளர் | முனைவர் வெ. தேவி,<br>முதல்வர் |

**முதன்மை ஆசிரியர்**
திரு. த. சிவகுமார்
துறைத்தலைவர் & இணைப் பேராசிரியர்

**துணை ஆசிரியர்கள்**

திருமதி. ஜெ. தேவி, இணைப் பேராசிரியர்

முனைவர் ம. மகாலட்சுமி, இணைப் பேராசிரியர்
முனைவர் அ. மலர்விழி, இணைப் பேராசிரியர்

முனைவர் இரா. கந்தசாமி உதவிப் பேராசிரியர்

முனைவர் ஜோ. சம்பத்குமார் உதவிப் பேராசிரியர்

திருமதி.நீ.பொற்செல்வி உதவிப் பேராசிரியர்

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

**சேலவாயல், சென்னை - 51**

**நோக்கம் (Vision):**

மாணவர்களுக்கு இலக்கண, இலக்கியப் பயிற்சி அளித்தல், இலக்கணப் பயிற்சியோடு தாய் மொழியில் பிழையின்றி எழுதவும் பேசவும செய்தல், தமிழ் சார்ந்த பல்வேறு தளங்களில் மாணவர்களைத் திறம்பட உருவாக்குவதே நோக்கமாகும்.

**செயல் (Mission):**

மாணவர்களுக்குப் பாடம் பயிற்றுவிப்பது மட்டுமல்லாமல் ஆய்வரங்கம், பயிலரங்கம் மூலம் இலக்கியப் படைப்பாற்றலை வளர்த்தல், நவீன காலச் சூழலில் கணினித் தமிழ் ஆற்றலை மேம்படுத்துதல், இதழியல் மற்றும் செய்தி ஊடகங்களில் தங்கள் ஆற்றலை வளர்த்துக்கொள்ளச் செய்தல் இன்னும் பிற செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல விழைகின்றோம்.

**பெருந்தலைவர் காமராஜரின் 122 ஆவது பிறந்த நாள்**

15/7/2024 அன்று நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜரின் 122 ஆவது பிறந்த நாள் விழா கல்வி வளர்ச்சி நாளாக நம் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு திரு. A.D. சுப்பையா (சென்னை வாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின் முறை தர்ம பண்டின் செயலாளர்) அவர்கள் தலைமைத் தாங்கினார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் திரு. க. இராமலிங்க ஜோதி (தலைவர், கவியரசு கண்ணதாசன் பாசறை) அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு காமராஜரின் சிந்தனைகளையும் வாழ்க்கையையும் எடுத்துரைத்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர்.V. தேவி அவர்கள் வரவேற்புரை வரங்கினார். "காமராஜர் என்றென்றைக்கும் தேவை ஏன் ?" என்ற மையத் தலைப்பில் கல்வி, வேளாண்மை, தொழில், அரசியல் ஆகிய தலைப்பில் மாணவர்கள் விவாத அரங்கத்தில் பங்கேற்று பேசினார்கள்.

இந்நிகழ்வுக்கு நெறியாளராக தமிழ்த்துறைத் பேராசிரியர் முனைவர் M. மார்த்தாண்ட பூபதி அவர்கள் கலந்து கொண்டு விவாத அரங்கத்தை நெறிப்படுத்தினார். இவ் விழாவின்

ஒரு பகுதியாக மாணவர்களுக்குப் பேச்சு, கட்டுரை, ஓவியம், ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு திரு. த. சிவகுமார் (தமிழ்த்துறைத் தலைவர்) அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தி பேசினார். இவ்விழா வின் ஒரு பகுதியாகப் பருவத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு சென்னை வாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின் முறை தர்ம பண்டின் மூலம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. சிறப்பாக நடைபெற வழிகாட்டிய கல்லூரி செயலாளர்& முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். தமிழ்த் துறையுடன் இணைந்து முதுநிலை கணினி அறிவியல் துறை செயல்பட்டமைக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நிகழ்ச்சியை முனைவர் திருமதி. ம. மகாலட்சுமி அவர்கள் (தமிழ்த்துறைப் பேராசிரியர்) தொகுத்து வழங்கினார். இறுதியாக நன்றியுரை முனைவர் . ஜோ சம்பத்குமார் (தமிழ்த்துறைப் பேராசிரியர்) அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் திரளாக மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். நிகழ்வு நாட்டுப்பற்றுடன் இனிதே நிறைவுற்றது



# திருத்தங்கல் நாடார் கல்லூரி

**சேலவாயல், சென்னை - 51**

(11/12/24) நம் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் மகாகவி பாரதியின் 143 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கமாகப் பாரதியின் பாடலுக்கு மாணவி பாவனா கும்மாவின் (B.sc-A/I) பரதநாட்டியம் நடைப்பெற்றது. கல்லூரியின் செயலாளர் திரு. நாராயண மூர்த்தி அவர்கள் தலைமை உரையாற்ற, கல்லூரியின் முதல்வர் முனைவர் வெ. தேவி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் முதுமுனைவர் நா. சிவா (உதவிப்பேராசியர், தமிழ்த்துறை) அவர்கள் "பாரதியின் பன்முக ஆளுமைகள்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இறுதியில் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டது. விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.



தமிழ்த்துறை மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் இணைந்து இன்று (20/2/25) ஒரு நாள் பயிலரங்கம் நடத்தின. இதில் சிறப்பு விருந்தினராக முனைவர் . ரா. இராஜகுமார் அவர்கள் " மூன்றாம் தலைமுறை இணையத்தில் கணித்தமிழ்ப் பயன்பாடு " என்ற தலைப்பிலும் , முனைவர். மரய ரீகன் சாமிக்கன்னு அவர்கள் " தமிழ் ஊடகமும் கணினியும் என்ற தலைப்பிலும் முனைவர் க. ஜானகி அவர்கள் " கணினித் தமிழில் செயற்கை நுண்ணறிவின் போக்குகள்" என்ற தலைப்பிலும்

மாணவர்கள் பயன் பெறும் வகையில் செயல்முறையில் விளக்கத்துடன் உரையாற்றினார்கள். நிகழ்வின் முன்னதாக கணினித்துறையின் தலைவர் முனைவர் ப. து. கஸ்தூரி பாய் அவர்கள் வரவேற்புரை வழங்க , தமிழ்த்துறைத் தலைவர் நிகழ்வின் நோக்கவுரையும் அனைத்து சிறப்பு விருந்தினர்களையும் துணைமுதல்வர் முனைவர் K. C லலிதாம்பிகா அவர்கள் சிறப்பித்தார்கள். இந்நிகழ்வு சிறக்க கல்லூரி செயலாளர் திரு . அ. நாராயண மூர்த்தி அவர்களும் கல்லூரி முதல்வர் முனைவர் வெ. தேவி அவர்களும் அனைத்து ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கினார்கள் நன்றியுரையை முனைவர். ம. மகாலட்சுமி அவர்களும் தொகுப்புரையை முனைவர் ஜோ. சம்பத்குமார் அவர்களும் வழங்கினர்





Thiruthangal Nadar College
Knowledge is Power

# திருத்தங்கல் நாடார் கல்லூரி

**சேலவாயல், சென்னை - 51**

(21/2/25) தமிழ்த்துறையும் பெண்கள் செயற்களம்& தமிழரண் மாணவர்களும் இணைந்து உலகத் தாய்மொழி நாள் விழாவினை சிறப்பாகக் கொண்டாடினர். நிகழ்ச்சியின் வரவேற்புரைய திரு. த. சிவகுமார் (தமிழ்த்துறைத் தலைவர் ) அவர்கள் நிகழ்த்தினார். வாழ்த்துரையை முனைவர் வெ. தேவி (கல்லூரி முதல்வர்) அவர்கள் வழங்கினார். துணை முதல்வர் முனைவர் K. C லலிதாம்பிகா அவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார். தாய்மொழி வரலாற்றை சிறப்பு விருந்தினர் தில்லை நாயகி அவர்கள் எடுத்துரைக்க தாய்மொழி நாள் உறுதிமொழியை செல்வி. அபிநயா அவர்கள் வாசிக்க அனைத்து மாணவர்களும் பேராசிரியர்களும் உறுதிமொழியை எடுத்தனர். மொழிப்பாடம் நடத்தும் அனைத்து தமிழ்ப் பேராசிரியர்களும் நிகழ்ச்சியில் சிறப்புச் செய்யப்பட்டனர்.நிகழ்ச்சியை சிறப்பாக திரு. சு நரேந்திரகுமார் (உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை) அவர்கள் தொகுத்து வழங்க நன்றியுரையை திருமதி நீ. பொற்செல்வி (உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை) அவர்கள் வழங்கினார். இனிதே மாணவர்களின் நாட்டுப்பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



# திருத்தங்கல் நாடார் கல்லூரி

**சேலவாயல், சென்னை - 51**

(10/3/25) தமிழ்த்துறை சார்பில் ஆக்கம் ஐ.ஏ.எஸ் அகாடமியுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் (M O U) மேற்கொள்ளப்பட்டது. வரும் கல்வியாண்டு முதல் தமிழ்த்துறை மாணவர்களுக்கும் பிற துறை மாணவர்களுக்கும் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித்தேர்வுகளுக்கும்( UPSC-IAS, IPS, IFS ) , தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித்தேர்வுகளுக்கும்(TNPSC-குரூப் I, II,& II A, குரூப் IV & VAO), இரயில்வே, SSC, மற்றும் TNUSRB( SI &police) முறையாக தயார் ஆவது எப்படி ? என்ற அடிப்படையில் கருத்தரங்குகள், வகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளோம் என்பதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



******************